மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


**பேச்சுப் போட்டி 2023**

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

# ஆண்டு 1

அனைவருக்கும் வணக்கம்.......

## நாம் சிறுவர்கள்

மண்ணில் சட்டி பானை செய்து
மகிழ்ந்து விளை யாடுவோம்.
மழலை மொழி பேசி நாமும்
மனம் மகிழ்ந்து பாடுவோம்.

சின்னஞ் சிறு கை களினால்
சித்திரமும் கீறுவோம்.
சிறப்புடனே நாங்கள் இங்கு
சிரித்து நடை போடுவோம்.

ஏற்றம் தரும் கல்வி தனை
எந் நாளும் கற்றிடு வோம்.
எல் லோரும் ஒற்று மையாய்
எப் போதும் கூடிடு வோம்

அம்மா அப்பா அடி பணிவோம்
ஆசான் சொல் நாம் கேட்போம்
அறிவு தரும் கல்வி கற்போம்
அவனி போற்ற வாழ்ந் திடுவோம்.

நன்றி
வணக்கம்



ஆக்கம் :
ஆசிரியர் திருமதி. கஜந்தி சதீஸ்கரன்.
ஆசிரியர் திருமதி. கௌரிஉஷா சந்திரசேகர்.

பேச்சுப் போட்டி எதிர்வரும் 03.06.2023 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.